முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்தஇந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் ஆடி மாதம் 01 திகதி முதல்

சுபகிருது வருடம் ஆடி மாதம் 08 திகதி வரை

(17.07.2022 ஞாயிறு முதல் 24.07.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தருமபலம் கொண்ட அரங்கனே
   தரணி காக்கவந்த தேசிகனே
   ஆறுமுகனார் வழிபாடு தன்னை
   அகிலமே அடைய வழிகாட்டும் குருராசனே
2. அரசனே நீகேட்க அகத்தியன்யானும்
   அருளுவேன் இந்தியா தமிழகத்தில்
   வருங்கால பலனாக சுபகிருது நள்ளிதிங்கள்
   வகைபட முதல் திகதிமேல் அட்டமதிகதி வரை நடக்கும்
3. நடக்கும் வாரநிகழ்வாக ஆசிதனை
   நாட்டிடுவேன் இந்தவித காலம்
   இடரென அரசியல் களம்தனில்
   இருக்கும் தலைமைகள் இடையே
4. இடையே குழப்பம் சஞ்சலம்
   எதிர்மறை நிலைகள் பெருகி
   சோடையுற சில அமைப்புகளும்
   சுருதிபடி பின்னடைவு முடிவுகாணும்
5. காணுமே மக்கள் சேவை மறந்து
   கனதனங்கள் சுயநலமுற சேர்த்த
   ஞானமிலா தலைமை மாந்தர்கள்
   நிதிகள் ஆஸ்திகள் மேல் கவனம்
6. கவனம் அரசு கொண்டுமே
   கையாள நேரும் அபகரிக்க
   அவனியில் இனி எவருமே
   ஆளுமைதனை வைத்து பொதுநிதி
7. பொதுநிதி மக்கள்நிதி சுருட்டும்
   பொல்லாத செயல்களுக்கு அஞ்சி
   பொது சேவைவழி மாற்றம் காணும்
   புகலுவேன் தலைமை பதவிகள்
8. பதவிகள் கொண்ட அதிகாரிகள்
   பாவச் செயலான ஊழலை
   பூதலத்தில் இனியும் தொடரா
   புண்ணிய வழிகட்கு வர

9. வருவதுடன் ஜீவ தயவுடன்
வடிவேலன் வழிபாடு செய்து
குருவரங்கன் கொள்கை ஏற்று
குறையிலா தரும சேவைஆற்றிட
10. ஆற்றிட இந்தியா தமிழகம் தானும்
ஆளுமை ஞானவழி சிறந்து
மாற்றம் ஞானஆட்சி காலமாக
மக்களை பாதுகாக்கும் முகமாக
11. ஆகவே சூழல்கள் பெருகி
அகிலம் வியக்கும்படி மாற்றம்
மிகைபட இந்தியா தமிழகம் காண்கும்
மொழிந்திட்ட வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் ஆடி மாதம் 1ம் நாள் 17.07.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடி மாதம் 8ம் நாள் 24.07.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

எல்லையில்லாது தர்மங்களை செய்து வெற்றி கண்டு தருமபலம் மிக்க ஆறுமுக அரங்க மகாதேசிகரே! தமது தர்மபலத்தாலும் தவபலத்தாலும் இவ்வுலகை காத்திடவே முருகப்பெருமானின் சக்தி வடிவமாக அவதரித்திட்ட ஞானதேசிகனே உலகமெங்கும் முருகப்பெருமானார் வழிபாட்டை செய்து கடைத்தேறிட வழிகாட்டும் குருராசனே எதிர்காலம் குறித்து தாம் அகத்திய மகரிஷி எம்மிடம் கேட்க அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் ஆடி மாதம் 1ம் நாள் 17.07.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடி மாதம் 8ம் நாள் 24.07.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தற்சமயம் நாட்டினில் அரசியல் களத்திலே தலைமைகளுக்கு இடையே நடக்கின்ற குழப்பம், சஞ்சலம் எதிர்மறையான செயல்பாடுகள் எல்லாம் இனி அதிகமாகி சில அமைப்புகள் பின்னடைவை சந்திக்க நேரும்.

மக்கள் சேவை மறந்து பொருளாசை கொண்டு சுயநலமாய் நடந்து பொருளை சேர்த்து வைத்த தலைமை மாந்தர்களின் சொத்துகள், பொருள்கள் மேல் அரசு கவனம் செலுத்தி முறையற்ற வகையில் சேர்த்திட்ட சொத்துகளையும், பொருளையும் அரசு தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் சூழல் உள்ளதப்பா.

இனி வரும் காலங்களில் ஆட்சிபொறுப்பை வைத்து அதிகாரத்தின் மூலம் பொதுநிதிகளை சுருட்டும் பொல்லாத செயல்களை செய்திட அஞ்சுவர் அதனால் பொது சேவை வழியான செயல்பாடுகள் இனி மாற்றம் அடையும்.

ஆதலினாலே அதிகாரிகள், பதவியாளர்கள் இனியேனும் பாவச் செயலான ஊழல் செய்வதை இனியும் தொடர்ந்து செய்திடாமல் புண்ணிய வழிக்குவந்து நேர்மையுடன் செயல்பட்டு ஜீவ தயவுடன் மக்களிடம் நடந்து வருவதுடன் ஜீவ தயவே வடிவான முருகப்பெருமானை வழிபாடுகள் செய்வதுடன் குறைவின்றி நிறைவாக தானதருமங்களையும் செய்து வரவர இந்தியா தமிழகம் நல்ல ஆட்சி அமைந்து ஞானவழியில் ஆட்சியர்கள் சென்று சிறந்து விளங்கி நல்ல மாற்றங்களை நாடும் வீடும் பெற்று ஆட்சியே ஞான ஆட்சி காலமாக மாறி மக்களை பாதுகாக்கும்

நல்லரசாக மாறி நன்மையான சூழல்கள் பெருகி இந்த உலகமே வியக்குமாறு அற்புதமான மாற்றங்களை அடைந்து சிறப்படையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–

––––––––––